வகுப்பு : 12

தேர்வு எண் 21/01/2025

# முதல் திருப்புதல் தேர்வு - ஜனவரி - 2025

நேரம் : 3.00 மணி]

## தமிழ்

[மொத்த மதிப்பெண்கள் : 90

அறிவுரைகள் : 1. அனைத்து வினாக்களும் சரியாக பதிவாகி உள்ளதா என்பதனைச் சரிபார்த்துக் கொள்ளவும். அச்சுப்பதிவில் குறையிருப்பின், அறைக் கண்காணிப்பாளரிடம் உடனடியாகத் தெரிவிக்கவும்.

2. நீலம் அல்லது கருப்பு மையினை மட்டுமே எழுதுவதற்கும் அடிக்கோடிடுவதற்கும் பயன்படுத்த வேண்டும்.

குறிப்பு : விடைகள் தெளிவாகவும், குறிப்பிட்ட அளவினதாகவும், சொந்த நடையிலும் அமைதல் வேண்டும்.

### பகுதி – I

குறிப்பு : அ) அனைத்து வினாக்களுக்கும் விடை தருக. 14X1=14

ஆ) கொடுக்கப்பட்ட நான்கு விடைகளில் மிகவும் ஏற்புடைய விடையினைத் தேர்ந்தெடுத்துக் குறியீட்டுடன் விடையினையும் சேர்த்து எழுதுக.

1. மீண்டுமந்தப் பழமைநலம் புதுக்கு தற்கு கவிஞர் குறிப்பிடும் பழமைநலம்

க) பாண்டியரின் சங்கத்தில் கொலுவிருந்தது உ) பொதிகையில் தோன்றியது

ங) வள்ளல்களைத் தந்தது

அ) க மட்டும் சரி ஆ) உ இரண்டும் சரி

இ) ங மட்டும் சரி ஈ) க, ங மட்டும் சரி

2. உயர்திணை என்மனார் மக்கட் சுட்டே

அஃறிணை என்மனார் அவரல பிறவே – இந்நூற்பா இடம்பெற்றுள்ள இலக்கண நூல்

அ) நன்னூல் ஆ) அகத்தியம் இ) தொல்காப்பியம் ஈ) இலக்கண விளக்கம்

3. இவற்றை வாயிலுக்கே சென்று இன்முகத்துடன் வரவேற்பாயாக என்று ஜலாலுத்தீன் ரூமி குறிப்பிடுவது

அ) வக்கிரம் ஆ) அவமானம் இ) வஞ்சனை ஈ) இவை அனைத்தும்

4. “மஞ்சள் குளிப்பாட்டி மையிட்டு முப்பாலும்

மிஞ்சப் புகட்ட மிக வளர்ந்தாய்” - என்று குறிப்பிடும் நூல்

அ) தண்டியலங்காரம் ஆ) தமிழ்விடு தூது இ) சிந்தாமணி ஈ) சிலப்பதிகாரம்

5. பொருத்துக.

அ) ஐப்பசி – 1. விளக்குத்திருவிழா

ஆ) கார்த்திகை – 2. ஓண விழா

இ) தை – 3. கடலாட்டு விழா

ஈ) மாசி – 4. பூச விழா

அ) 4, 3, 2, 1 ஆ) 3, 4, 1, 2 இ) 2, 1, 4, 3 ஈ) 2, 3, 4, 1

6. உள்ளொன்று வைத்துப் புறம் ஒன்று பேசுவார் இத்தொடர் உணர்த்தும் பண்பு

அ) நேர்மறைப் பண்பு ஆ) எதிர்மறைப் பண்பு

இ) முரண் பண்பு ஈ) இவை அனைத்தும்



Kindly Send Me Your Questions & Answer Keys to us: padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.com

7. ஐம்பெரும் காப்பியங்களில் பெருங்காப்பியத்திற்குரிய உறுப்புகள் முழுமையாக அமையப்பெற்ற காப்பியம்

அ) சிலப்பதிகாரம் ஆ) மணிமேகலை இ) வளையாபதி ஈ) சிந்தாமணி

8. திண்ணியர் என்பதன் பொருள்

அ) அறிவுடையவர் ஆ) மன உறுதி உடையவர்

இ) தீக்காய்வார் ஈ) அறிவினார்

9. பொருந்தாத இணையைக் குறிப்பிடுக.

அ) அறம் – தருமன் ஆ) நீதி – நாரதர் இ) பீமன் – வலிமை ஈ) வள்ளல் – கர்ணன்

10. அதிசய மலரின் புன்னகை உணர்த்துவது

அ) நம்பிக்கை ஆ) பெருமிதம் இ) புகழ் ஈ) அச்சம்

11. "தாங்கெட நேர்ந்த போதும் தமிழ்கெட லாற்றா அண்ணல்" - யார்?

அ) பாரதி ஆ) பாரதிதாசன்

இ) மயிலை. சீனி வேங்கடசாமி ஈ) ச.த சற்குணர்

12. கடையெழு வள்ளல்களின் வரிசையைச் சாராத மன்னர்கள்

அ) ஆய் அண்டிரனும் அதிகனும் ஆ) நல்லியக்கோடனும் குமணனும்

இ) நள்ளியும் ஓரியும் ஈ) பாரியும் காரியும்

13. வெங்கதிர், உழாஅது ஆகிய சொற்களின் இலக்கணக்குறிப்பு முறையே

அ) பண்புத்தொகை செய்யுளிசை அளபெடை ஆ) பண்புத்தொகை சொல்லிசை அளபெடை

இ) வினைத்தொகை இடைக்குறை ஈ) வினைத்தொகை பண்புத்தொகை

14. இரட்சணிய யாத்திரிகம் என்பது

அ) உவமைக் காப்பியம் ஆ) உருவகக் காப்பியம்

இ) குறியீட்டுக் காப்பியம் ஈ) ஒற்றுமைக் காப்பியம்

## பகுதி – II

### பிரிவு–1

எவையேனும் மூன்று வினாக்களுக்கும் விடை தருக. 3x2=6

15. தண்டியலங்காரத்தின் பிரிவுகள் எத்தனை? அவை யாவை?

16. "எத்திசையிலும் சோறு தட்டாது கிட்டும்" - யாருக்கு?

17. ஒரு முக எழினி, பொருமுக எழினி குறிப்பு வரைக.

18. செவியறிவுறூஉ துறையை விளக்குக.

### பிரிவு–2

எவையேனும் இரண்டு வினாக்களுக்கு விடை தருக. 2x2=4

19. நடை அழகியல் பற்றித் தொல்காப்பியம் கூறும் கருத்தைக் குறிப்பிடுக.

20. கீழ்த்திசைச் சுவடிகள் நூலகம் குறித்து எழுதுக.

21. "தமிழர் வளர்த்த அழகு கலைகள்" - நூல் பற்றிக் குறிப்பு வரைக.



Kindly Send Me Your Questions & Answer Keys to us: padasalai.net@gmail.com

பிரிவு – 3

எவையேனும் ஏழு வினாக்களுக்கு விடை தருக. 7x2=14

22. உவமைத் தொடரைச் சொற்றொடரில் அமைத்து எழுதுக.

தாமரை இலை நீர் போல (அல்லது) உள்ளங்கை நெல்லிக்கனி போல

23. மயங்கொலிச் சொற்களை ஒரே தொடரில் அமைத்து எழுதுக.

அலை, அளை, அழை (அல்லது) ஆனை, ஆணை

24. பொருத்தமான வேற்றுமை உருபுகளைச் சேர்த்து முறையான தொடர்களாக ஆக்குக.

அ) மாறன் பேச்சுத்திறன் யார் வெல்ல முடியும் ஆ) சான்றோர் மதிப்பு கொடுத்து வாழ்வு உயரலாம்.

25. கீழ்க்காணும் நான்கு சொற்களைக் கொண்டு தொடர் அமைக்க.

அ) வானம், பற, நிலவு, தொடு ஆ) குதிரை, வேகம், ஒடு, தாவு

26. ஏதேனும் ஒன்றனுக்குப் பகுபத உறுப்பிலக்கணம் தருக.

தந்தனன் (அல்லது) பகைத்த

27. ஏதேனும் ஒன்றனுக்குப் புணர்ச்சி விதி தருக.

இனநிரை (அல்லது) பெருங்கடல்

28. தொடரில் உள்ள பிழைகளை நீக்கி எழுதுக.

அ) குதிரையும் யானையும் வேகமாக ஓடியது

ஆ) சென்னையில் இருந்து நேற்று வருகிறான்

29. விடைக்கேற்ற வினா அமைக்க.

சாலையில் இடம்பெற்றிருக்கும் குறியீடுகள் போக்குவரத்தினைச் சீர் செய்யவும் பாதுகாப்பாகப் பயணிக்கவும் உதவுகின்றன.

30. திருவளர்ச்செல்வன், திருவளர்செல்வன் – சரியானது எது? அதற்கான இலக்கண விதி யாது?

பகுதி – III

பிரிவு – 1

எவையேனும் இரண்டு வினாக்களுக்கு விடை தருக. 2x4=8

31. "ஏங்கொலிநீர் ஞாலத்து இருளகற்றும்" - இடம்சுட்டிப் பொருள் விளக்குக.

32. குகனோடு ஐவராகி வீடணனோடு எழுவரான நிகழ்வுகளைச் சுட்டிக்காட்டுக.

33. நாட்டிய அரங்கின் அமைப்பு குறித்து இளங்கோவடிகள் கூறும் செய்திகளைத் தொகுத்து எழுதுக.

34. "சூதும் கள்ளும் கேடு தரும்" - திருக்குறள் வழி விவரிக்க.

பிரிவு – 2

எவையேனும் இரண்டனுக்கு விடை தருக. 2x4=8

35. சங்க இலக்கிய மொழியின் ஒரு பண்பான தொகை நிலை குறித்து எழுதுக.

36. தேசிய பேரிடர் மேலாண்மை ஆணையம் குறிப்பு வரைக.

37. சென்னையின் பண்பாட்டு அடையாளங்களில் இன்றும் நிலைத்து இருப்பனவற்றைக் குறிப்பிடுக.



Kindly Send Me Your Questions & Answer Keys to us: padasalai.net@gmail.com

38. வேளாண் மேலாண்மை குறித்து நீவிர் பரிந்துரைப்பனவற்றை எழுதுக.

பிரிவு – 3

எவையேனும் மூன்று வினாக்களுக்கு விடை தருக. 3x4=12

39. அ) சொற்பொருள் பின்வருநிலை அணி **(அல்லது)** ஆ) ஏகதேச உருவக அணி

40. இலக்கிய நயம் பாராட்டுக.

பிறப்பினால் எவர்க்கும் – உலகில்
பெருமை வாராதப்பா!
சிறப்பு வேண்டுமெனில் – நல்ல
செய்கை வேண்டுமப்பா!
நன்மை செய்பவரே – உலகம்
நாடும் மேற்குலத்தார்!
தின்மை செய்பவரே – அண்டித்
தீண்ட ஒண்ணாதார்!

– கவிமணி தேசிய விநாயகம்

41. பின்வரும் பழமொழியை வாழ்க்கை நிகழ்வில் அமைத்து எழுதுக.

அ) ஒன்றுபட்டால் உண்டு வாழ்வு **(அல்லது)** ஆ) எறும்பு ஊரக் கல்லும் தேயும்

42. வாகைத்திணையைச் சான்றுடன் விளக்குக.

43. தமிழர் பரம்பரைப் பெயர்களை அட்டவணைப்படுத்தி எழுதுக.

பகுதி – IV

அனைத்து வினாக்களுக்கும் விடை தருக. 3x6=18

44. அ) நெடுநல்வாடையில் நக்கீரர் காட்டும் மழைக்கால வருணனையைச் சொல்லில் வடிக்க.

**(அல்லது)**

ஆ) எச். ஏ கிருட்டிணனார் "கிறித்துவக் கம்பரே" என்பதை நும் பாடப்பகுதி வழி நிறுவுக.

45. அ) குடும்பம் என்ற சிறிய அமைப்பிலிருந்தே மனித சமூகம் என்னும் பரந்த அமைப்பு கட்டமைக்கப்படுகிறது – எவ்வாறு? விளக்குக. **(அல்லது)**

ஆ) திரைப்படத்துறை என்பது ஆயிரம் பேரைக் காப்பாற்றும் தொழிலா? அல்லது கலைகளின் சங்கமமா? உங்கள் பார்வையைக் கட்டுரையாக்குக.

46. அ) "சாலை விபத்தில்லாத் தமிழ்நாடு" – இக்கூற்று நனவாக நாம் செய்ய வேண்டியவை யாவை?

**(அல்லது)**

ஆ) சங்ககால வரலாற்றை அறிந்துகொள்ள, புகளூர்க் கல்வெட்டு எவ்வகையில் துணை புரிகிறது? – விளக்குக.

பகுதி – V

அடிபிறழாமல் செய்யுள் வடிவில் எழுதுக. 4+2=6

47. அ) "ஒருமையுடன்" எனத் தொடங்கும் பாடலை அடிபிறழாமல் எழுதுக.

ஆ) "மகற்கு" என முடியும் குறட்பாவை அடிபிறழாமல் எழுதுக.



Kindly Send Me Your Questions & Answer Keys to us: padasalai.net@gmail.com